# ஈழத்து வேதியர்களிடம் வழங்கும் மொழி வழக்காறுகள் [பரி பாஷைகள்]

தொகுப்பு:

நீர்வை தியாக. மயூரகிரிக் குருக்கள்

வெளியீடு:

சனாதன சேவா பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து வேதியர்களிடம் வழங்கும்

# மொழி வழக்காறுகள்

## (பரி பாஷைகள்)

தொகுப்பு:

நீர்வை தியாக. மயூரகிரிக் குருக்கள்

வெளியீடு:

சனாதன சேவா பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

தலைப்பு:- "ஈழத்து வேதியர்களிடம் வழங்கும் மொழி வழக்காறுகள்"

தொகுப்பாசிரியர்:- "வேதாகம யுவரத்னா"

சிவஸ்ரீ. தியாக. மயூரகிரிக்குருக்கள்

*(B.A. Dip. in. Journalism (Merit.)*

நீர்வை.

மொழி:- தமிழ்

பதிப்பு ஆண்டு:- *2015* ஆவணி

பதிப்பு விபரம்:- முதல் பதிப்பு

பக்கம்:- *25*

வெளியீடு:- சனாதன சேவாபீடம்

அச்சுப்பதிப்பு:- ஷாம்பவி பதிப்பகம்,

யாழ்ப்பாணம்.

கிளை: நீர்வேலி.

*021 222 4143*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

உலகில் பலர் பல்வாறு வாழ்கின்றார்கள். ஆனால் நம் முன்னோர்கள் தமக்கென பண்பட்ட நல்வாழ்வை தனித்துவமான மரபு களோடு வாழ்ந்து வந்துள்ளனர்.

வைதீக ஹிந்துக்களான அவர்களின் மொழி வழக் காறுகள் (பரிபாஷைகள்) பற்பல. அவற்றில் பலவும் கால மாற்றத்தால் கரையத் தொடங்கியுள்ளன. அவற்றை தொகுப்பது ஒரு வரலாற்றுத் தேவை.

ஆயினும், இன்னும் இவற்றை அறிவதில் ஆர்வ முள்ளோர் பலர். ஆனால், அவற்றை அறிந்து வைத்திருப்போர் தொகை இன்று குறைந்து விட்டது.

இந்த காரணம் பற்றியும் இன்னும் இந்த சமூகமொழி வழக்கை பதிவு செய்யும் நோக்கிலும் இந்த தொகுப்பு முயற்சியை செய்துள்ளேன். பூரணமான தொகுப்பு அல்ல எனினும், இது ஒரு புதிய முயற்சி இயன்ற வரை தொகுத்துள்ளேன். பெரியோர்கள் குற்றம் களைந்து குணம் கொண்டு போற்ற வேண்டுகின்றேன். தாங்களின் மேலான அபிப்பிராயத்தையும் அறிய விரும்பு கின்றேன்.

இங்கே உள்ள சொற்கள் அவற்றுக்கான பொருள் என ஒரு அகராதி போலன்றி, எப்பொருளில் பாவிக்கப்படு கிறதோ அப்பொருளையே குறித்திருக்கிறேன் என்பதையும் கவனிக்குக. அது போலவே, ஆலய கிரியைகளில் பாவிக்கும் சொற்களை தவிர்த்து இல்லங்களில் ஆண், பெண் இருபாலாரும் பாவிக்கும் சொற்களையே அதிகம் சேர்த்துள்ளேன்.

இந்நூலாக்கத்திற்கு உதவியவர்கள் ஆலோசனைகள் வழங்கியவர்கள் பலர் அவர்கள் யாவருக்கும் சிறப்பாக பதிப்பித்த ஷாம்பவி பதிப்பகத்தினருக்கும் உளமார்ந்த நன்றிகள்.

**தொகுப்பாசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைதீக அந்தணர்களினிடையே வழங்கும் பரிபாஷைகள்

அகம் – மனம், வீடு

அமாவாஸ்யை – கிருஷ்ணபக்ஷ கடைசி நாள்

அத்யயனம் – ஓதுதல், கற்றல்

அபிவாதனம் – "அபிவாதயே" என்று தொடங்கி ஹோத்திரம், ஸூத்ரம், நாமம் சொல்லுதல்

அத்யாபகர் – ஆசிரியர்

அநுதாபம் – வேதனை

அந்நபாநாதி – உணவு, நீர் முதலியன

அக்ஷதை – மஞ்சள் கலந்த அரிசி

அபராதம் – தவறு

அடைக்காய் – பாக்கு

அன்னப்ராசனம் – குழந்தைக்கு முதன் முதலில் உணவூட்டல்

அந்தி – மாலை

அநுஷ்டானம் – நித்ய கர்மாக்களை செய்தல்.

அற்பசங்கை – சிறுநீர் கழித்தல்

அர்த்த ஜாமம் – நடுநிசி நள்ளிரவு

அதிதி – விருந்தினர்

அத்திம்பேர் – அத்தையின் கணவர், அக்காவின் கணவர்

அபவித்ரம் – சுத்தமில்லாதது

அயோக்யம் – தகுந்ததன்று

ஆசீர்வாதம் – ஆசி கூறுதல்

ஆதுரம் – பேரார்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸனம் – இருக்கை

ஆபாத சூடம் – திருவடி முதல் திருமுடி வரை

ஆச்சார்யர் – குரு

ஆயுஷ்யஹோமம் – பிறந்த நாளன்று செய்யும் (நட்சத்திரம் அன்று) விசேட ஹோமம்)

ஆதீனம் – நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஆவாஹனம் – ஒரு பொருளில் வரச் செய்தல்

ஆஹுதி – நெய்யினால் ஒரு முறை ஹோமம் செய்தல்

ஆஜ்யம் – நெய்

ஆகாசம் – வானம்

இதிஹாஸம் – கதை

ஈரவாடை – நனைந்த ஆடை

உபதேசம் – அறிவுரை

உத்தரிணி – பாத்திரத்திலிருந்து தீர்த்தம் எடுக்கும் கரண்டி

உத்தரீயம் – மேலே அணிந்து கொள்ளும் துணி

உபகாரம் – உதவி

உத்தராபோஜனம் – உணவின் முடிவில் கையில் ஒருமுறை மந்திரத்தோடு தீர்த்தம் உட்கொள்ளல்

உபநயனம் – பூணூல் அணிவிக்கும் வைபவம்

உதகசாந்தி – சாந்தி தரும் தீர்த்தம்

உத்யோகம் – முயற்சி, வேலை

உபவாசம் – பட்டினி

உபதம்சம் – ஊறுகாய்

உஷ்ணோதகம் – வெந்நீர்

உபத்ரவம் – தொல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரம் – விடை

உத்வாஹம் – கல்யாணம், விவாகம்

ஊசல் – ஊஞ்சல்

எழுந்தருள்க – வரவேண்டும்

ஏகம் – ஒன்று

ஏகாந்தம் – ரஹஸ்யம்

ஏதனம் – பாத்திரம்

ஐதிகம் – கர்ண பரம்பரையாக கூறப்படும் நிகழ்ச்சி

ஓதுதல் – படித்தல்

ஔபாஸனம் – திருமணமானவர்கள் செய்ய வேண்டிய நித்யஹோமம்

கர்ணம் – காது

கண்டம் – கழுத்து

கடாக்ஷம் – பெரியவர் அல்லது இறைவனின் பார்வை

கடிஸூத்ரம் – அரைஞாண் கயிறு

கங்கணம் – கைக்காப்பு

கல்யாணம் – மங்களம்

கர்ப்பகிருஹம் – மூலஸ்தானம், கருவறை

காமக்ரோதாதி – ஆசை, கோபம் முதலியன

காலாநீதம் – காலம் கடந்தது.

கிருதஜ்ஞை – நன்றியுணர்வு

கிரமம் – வரிசை

கிருஷிகர் – விவசாயி

கிருஹம் – வீடு

கிருஹஸ்தன் – இல்வாழ்வான்

குருகுலவாஸம் – ஆசார்யரின் ஆத்தில் (அகத்தில்) வசித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைங்கர்யம் – அடிமைப்பணி

(இறை கைங்கர்யம், குரு கைங்கர்யம்)

கைமாறு – பதிலுதவி, கோயில் சிதம்பரம், ஸ்ரீரங்கம்

கௌசிகம் – ஒரு ஹோத்ரம்

கௌபீனம் –கச்சை உள்ளாடை

கௌண்டின்யம் – ஒரு ஹோத்ரம்

கௌணியர் கோன் – திருஞானசம்பந்தர்

கௌதமர் – ஒரு முனிவர்

சஷ்டியப்த பூர்த்தி – 60 அகவை பூர்த்தி

சமாவர்த்தனம் – விவாகத்திற்கு முன் செய்யும் பிரம்மச்சரிய விரத பூர்த்தி

க்ருஷ்ணாஜினம் – மான்தோல்

சதாபிஷேகம் – 80 ஆவது வயது பூர்த்தியில் செய்யும் மங்கல வைபவம்

சயனம் –படுத்தல்

சாயை – நிழல்

சாமரம் – கவரி

சத்ரு – எதிரி

சாத்துப்படி – இறைவனுக்கு செய்யும் விரிவான அலங்காரம்

சீமந்தம் – கர்ப்பஸ்தீரிக்கு செய்யும் மங்கல வைபவம்.

சிகை – முடி

சிம்மம் – சிங்கம்

சீமான் – செல்வன்

சாலீசூர்ணம் – அரிசிமா

சேவித்தல் – வணங்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமாச்சாரம் – சங்கதி, செய்தி

சுபம் – மங்களம்

சுரர் – தேவர்

சுமங்கலி – கணவனோடு இணைந்து வாழ்பவள்

சுமுகம் – மலர்ந்த முகம்

சூக்ஷ்மம் – மிகச் சிறியது

க்ஷேமம் – (சேமம்) – நலம்

தமஸ் – இருள்

தயை – கருணை

தளிகை – சமையல்

தளிகை – ஈழத்து வழக்கில் ஒரு குறித்த அளவு சாதம்

தம்பதி – கணவன், மனைவி

தயிரமுது – மோர், தயிரன்னம்

தர்ப்பை – வைதிக காரியங்களுக்கு பயன்படும் புகழ் மிக்க புல்

தரிசனம் – காட்சி

தாரணம் – தரித்தல்

தாஸன் – அடியவன்

தாளபத்ரம் – பனை ஓலை

திருவாராதனம் – பூஜை

திருமகள் – மஹாலட்சுமி

திருமுறை – சைவ திருமுறைகள்

திவசம் – நாள்

திருவீதி – சுவாமி உலா வரும் வீதி

திருமாங்கல்யம் – தாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமடைப்பள்ளி – கோவிலின் நைவேத்யம் செய்யப்படும் இடம்

திருவுள்ளம் – எண்ணம், அபிப்ராயம்

திருவடிச் சம்பந்தம் கொண்டவர் – சீடர்

திருவிளக்கு – தீபம்

திருநாடு – வைஷ்ணவ மரபில் வைகுந்தம் அல்லது சுவர்க்கம்

திருப்பணி – கோவில் வேலை

திருமஞ்சனம் – அபிஷேகம்

திருமஞ்சன கிணறு – அபிஷேக நீர் எடுக்கும் தீர்த்த கிணறு

திருவாபரணம் – இறைவனுக்கு சாற்றும் ஆபரணங்கள்

திருவொற்றாடை – அபிஷேகம் நிறைவு பெற்றதும் ஸ்வாமி அம்பாள் திருமேனி துடைக்கும் ஆடை

தீபாவளி – விளக்கின் வரிசை, பண்டிகை

தீர்த்தவாரி – மகோற்ஸவ நிறைவு விழா

தீர்த்தோத்ஸவம் – அவப்ருத ஸ்நானம்

திருக்கொணாமலை – திருகோணமலை, திரிகொணாசலம்

திருப்பாவாடை – நிரம்ப அன்னம் இறைவனுக்கு சமர்ப்பித்தல்

தேவரீர் – தாங்கள்

தைலம் – எண்ணை

த்வாதச ஆதித்யர் – பன்னிரு சூரியர்

த்வாதச நாமம் – சந்நியாவந்தனாதிகளில் தொட்டுக் கொள்ளும் கேசவாதி விஷ்ணுவின் பன்னிரு திருநாமங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்வாரம் – வழி, வாசல்

த்வஜம் – கொடி

த்விஜர் – அந்தணர், இரு பிறப்பாளர்

நமஸ்காரம் – வணக்கம்

நாமம் – பெயர்

நாநாதேசம் – பலநாடு

நாரீ – பெண்

நாரிகேளம் – தேங்காய்

நாமகரணம் – பெயரிடுதல்

நாஸாபரணம் – மூக்குத்தி

நாமமாயிரம் – சஹஸ்ர நாமம்

நிஷ்டை – தியானம்

நிர்மாணம் – சிருஷ்டி, புது உருவாக்கம்

நியதி – வரைமுறை

நியாசம் – தொடுதல்

நியந்த்ரீ – லலிதா சஹஸ்ரநாமத்தில் 568 ஆவது நாமம் (அடக்கி ஆள்பவள்) இலங்கையிலுள்ள அந்தண சமூக அமைப்பு ஒன்று

நோன்பு – விரதம்

பகவான் – ஈஸ்வரன், கடவுள்

பகவத் விஷயம் – இறை விடயம், ஆன்மீக விடயம்

பரிவட்டம் – இறைவனின் வஸ்த்ரம்

பரிமள திரவ்யம் – வாசனை பொருள்

பணியாரம் – பக்ஷணம்

பத்ததி – ஆகம கிரியைகளுக்கு உதவும் நூல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவித்ரம் – சுத்தம், கையிலணியும் தர்ப்பை

பரிஷேசனம் – உணவு உண்ணத் தொடங்கும் போது கையில் தீர்த்தம் எடுத்து மந்திர சகிதமாக இலையைச் சுற்றி வட்டம் போடுதல்.

பஸ்மம் – வீபூதி, திருநீறு

பரான்னம் – அயலார் வீட்டில் உண்ணுதல்

பாணிக்ரஹணம் – கைப்பிடித்தல்

பானகம் – குடிதண்ணீர்

பாரணை – விரதத்தின் பின் மறுநாள் காலை உணவு உண்ணல்

பாகசாலை – சமையலறை

பாவனை – எண்ணம்

பாரதம் – பாரதநாடு, மஹாபாரதம்

பாஷை – மொழி

பிரம்மச்சாரி – வேதமோதும் திருமணம் செய்யாத ஆடவன்

பிரதிக்ரஹம் – தானம் பெறல்

பிரச்னம் – வினா

பிருஹஸ்பதி – தேவகுரு, அறிவுரை கூறும் ஆசிரியர்

பிதாமஹர் – தந்தையின் தந்தை

பிதாமஹி – தந்தையின் தாய்

புளியோதரை – புளிச்சாதம்

புஷ்பம் – மலம்

புஜம் – தோள்

பூசுரர் – பிராஹ்மணர்

பூர்வர் – முன்னோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூணூல் – யக்ஞோபவீதம்

பெருமாள் – மஹாவிஷ்ணு

பொரி – லாஜம் (நெற்பொரி)

பௌர்ணமி – சுக்லபக்ஷ நிறைவு, முழுமதி நாள்

போஜனசாலா – சாப்பாட்டறை

பீமரதசாந்தி – 70 ஆவது அகவை பூர்த்தியில் செய்யும் சாந்தி

பௌராணிகர் – புராணம் சொல்பவர்

ப்ரஸாதம் – அனுக்ரஹம், அருள்

ப்ரோக்ஷணம் – மந்திரத்தோடு நீர் தெளித்தல்

ப்ரீதி – அன்பு

மயூரம் – மயில்

மணை – பலகைக் கட்டை

மகள் – புத்ரீ

மகன் – புத்ரன்

மஞ்சனசாலா – குளியலறை

மண்டகப்படி – உத்ஸவ காலங்களில் விசேடமாக செய்யப்படுவது

மாத்யான்னிகம் – உச்சிக்காலக் கடன்

மாதுலர் – அம்மான், மாமனார்

மாதாமஹர் – தாயின் தந்தை

மாதாமஹி – தாயின் தாய்

மாமன்றம் – இந்து மாமன்றம்

முறம் – சுளகு

மூஷிகம் – எலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதி – சந்யாஸி

ஜலம் – தண்ணீர்

ஜல்லடை – அரிப்பெட்டி

யாகம் – வேள்வி

ஜீ யூ – அக்காவின் கணவர் (ஹிந்திச்சொல்)

ராகம் – விருப்பம், ராகங்கள்

ரவிக்கை – பெணகளின் மேலாடை

ராக்ஷசன் – அரக்கன்

ரிஷபம் – காளை, ஒரு ராசி

ருது சோபனம் – பூப்புனித நீராட்டு, ருது சாந்தி

ரூபம் – உருவம்

லவணம் – உப்பு

லௌகிகம் – உலகை அநுசரித்த வாழ்வு

வடிவழகு – திருமேனி அழகு

வரன் – மாப்பிள்ளை , உயர்ந்தவன்

வடிவழகி – முன்னேஸ்வரத்து அம்பாள்

வந்தனம் – வணக்கம்

வாஸஸ்தலம் – வசிக்குமிடம்

வாணலி – இரும்புச்சட்டி

வாசாம கோசரம் – சொல்லுக்கு எட்டாதது

வாத்யார் – ஆசிரியர், வேத ஸ்மிருதிகளை சொல்லி
தருபவர்.

வித்யை – அறிவு

விஜயம் – ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

வேதம் – மறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைச் சக்கரை – உப்பு

வேதாந்தம் – உபநிஷத், சங்கர வேதாந்தம்

ஸந்த்யா – இரவ பகல் சேர்க்கை

ஸந்த்யா வந்தனம் – காலை மாலை வழிபாடு

ஸமிதாதானம் – பிரம்மச்சாரிகள் பலாச சமித்தை கொண்டு செய்யும் ஹோமம்

ஸ்திரி – பெண்

ஸ்தம்பம் – தூண்

ஸ்தலம் – பூமி,

ஸ்நானம் – நீராடல்

ஸ்வப்னம் – கனவு

ஸ்வீகாரம் – பெற்றுக் கொள்ளுதல்

ஸ்வயம் – தானே

ஸ்திரம் – நிலையானது

ஹோமம் – அக்னியில் ஆஹுதி செய்தல்

க்ஷீரம் – பால்

ஸ்ரீமான் – திருவாளன்

ஸ்ரீமதி – திருமதி

ஸ்ரீவித்யா உபாசனை – அம்பாளை குறித்து செய்யும் மிக உயர்ந்த வழிபாட்டு நெறி.

ஸ்ரீசக்ரம் – அம்பாளின் இருப்பிடமான ஸ்ரீ சக்ரராஜம்

ஸ்ரீராமஜெயம் – ராமனுக்கு வெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னும் சில.....

பரமாச்சார்யார் மஹா பெரியவாள்
காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர
சரஸ்வதி சங்கரராச்சார்யர்

ஸ்ரீமடம் – காஞ்சி சங்கரமடம்
பாலபெரியவாள் – விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்
லங்காத்வீபம் – இலங்கை
வீணாகானபுரம் – யாழ்ப்பாணம்
நீரவாடீபுரம் – நீர்வேலி
சாலிவாடீபுரம் – திருநெல்வேலி
கரதண்டபுரம் – கைதடி
ஸ்கந்தாரண்யம் – கந்தவனம்
யந்த்ரவாடீபுரம் – அச்சுவேலி
மயூரபந்தி – மயிலணி
ஜோதிகாமம் – கதிர்காமம்
புரகானன விமோசன புரி – மாவிட்டபுரம்
ஸ்வர்ணாலயம் – பொன்னாலை
ஸர்வகலாசாலை – பல்கலைக்கழகம்
பஞ்சகவ்யம் – பசுப்பால், தயிர், நெய், சாணம், கோசலம், இவ்வைந்தும் மந்திரத்தோடு சேர்த்து உருவான திரவ்யம்.
பஞ்ச சம்ஸ்காரம் – வைஷ்ணவர் பெறும் முத்ராதாரணம், திருமண் காப்பு, மாந்த்ரோபதேசம், தாஸ்ய நாமம் , யாகம் எனும் ஐவித தீட்சை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஷன் – ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன், சின்மயா மிஷன்

ஹாஸ்யம் – சிரிப்பு, நகைச்சுவை

சுடர் – ஞானச்சுடர் மாத சஞ்சிகை

அருள்ஒளி – மாத ஆன்மீக சஞ்சிகை

மடி – தூய்மை

பத்துப்பாத்திரம் – மீதியுள்ள பாத்திரம்

கர்ணவேதனம் – கடுக்கண பூட்டுதல்

ஸ்வீகாரம் – பெற்றுக்கொள்ளல்

தந்த சுத்தி – பல் துலக்கல்

சௌக்கியம் – சுகம்

நாத்தனார் – மச்சாள்

கொழுந்தனார் – மச்சான்

சாதம் – திருவமுது, பொங்கல்

மகர சங்கராந்தி – தைப்பொங்கல்

மாவிளக்கு – முருகனுக்கு விசேடமாக செய்யப்படும் திணைமா விளக்கு

அங்கி – மேலாடை

ஓரகத்தி – ஓரகத்தில் இருப்பவள்

சீடை – கிருஷ்ண ஜெயந்திக்காக விசேடமாக செய்யப்படும் ஒரு பட்சணம்

ஆவணி அவிட்டம் – உபநயனமான ஒவ்வொருவரும் வேதமாதாவை வழிபட்டு புதுப்பூணூல் மாற்றிக் கொண்டு ஹோம வழிபாடு கள் செய்யும் நாள்

அடிசில் – உணவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கார அடிசில் – வைஷ்ணவர் செய்யும் விசேடமான சக்கரை அமுது

ஜானு வாஸம் – விவாகத்திற்கு முதல் நாள் சமாவர்த்தனம் ஆன பின் நடக்கிற ஒரு லௌகீக வைபவம்

பும்ஸவனம் – முதல் முறை கர்ப்பவதியான பெண்ணுக்கு மூன்றாம் மாதம் நடக்கிற ஒரு வைதீக சம்ஸ்காரம்.

நாமகரணம் – பெயர் சூட்டல்

கபாடம் – கதவு

திருப்புகழ் – அருணகிரி நாதர் அருளியது

அனுபூதி – கந்தரனுபூதி

கவசம் – கந்தஷஷ்டி கவசம்

அந்தாதி – அபிராமி அந்தாதி

மணிவாஸகர் – மாணிக்கவாஸகர்

சஹஸ்ரநாமம் – விஷ்ணு சஹஸ்ரநாமம், லலிதா சஹஸ்ரநாமம்

சவரம் – முகச்சவரம் (முடி) எடுத்தல்

மஹாதேவர் – சிவபெருமான்

ராமகானசபா – கொழும்பை தலைமையகமாக கொண்டியங்கும் பிராம்மணசபா

பாவை – திருப்பாவை, திருவெம்பாவை

ஆர்த்திரா தரிஸனம் – ஆருத்ரா தரிசனம் (மார்கழி திருவாதிரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷட்கோணம் – ஆறுகோணம்

காமதேனு – கேட்டதை அருளும் தேவலோக பசு

விஸ்வகர்ம குலத்தார் – பஞ்சகம்மாளர்
(சில்ப, மர, இரும்பு, பொன் வேலை செய்வோர்)

உஷ்ணீகம் – தலைப்பா,

அக்ரஹாரம் – குயிருப்பு (உதாரணம் மயிலணி)

போதாயன அமாவாஸை – பஞ்சாங்கத்தில் குறிக்கப்பட்ட ஒரு நாள்

மடிசார் – பெண்கள் அணியும் ஆடை
(இது ஈழத்தில் விசேட நாள் ஆடையாகும்)

பஞ்சகச்சம் – ஐந்து கச்சங்கள் உடைய திருமணமான அந்தணர்கள் அணியும் ஆடை

தர்மசாஸ்தா குருகுலம் – ஸ்ரீ மஹாதேவ வாத்யாரால் ஸ்தாபிக்கப்பட்டு இயக்கப் படும் பிரபலமான இணுவி லிலுள்ள வேத பாடசாலை.

ஒன்றியம் – இந்துக் குருமார் ஒன்றியம்

சட்டகர் – சகலர் (ஒரே வீட்டில் பெண் எடுத்தவர்)

பேணி – பேணப்படுவது Cup, சிறுபாத்திரம்

தட்டுடுப்பு – ஈழத்து வைதீகப்பெண்களிடமே காணப்பட்ட ஒரு வகை கேரளப்பாணி விசேட உடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரதட்சணை என்றால் என்ன?

" நமது ஹிந்து மத நூல்களில் கல்யாண முறைகளைப் பற்றிச் சொல்லுகையில் எட்டு விதமாகச் சொல்லப்பட்டிருக் கிறது.

"இந்த எட்டு விதமான கல்யாண முறைகளிலும் வரதட்சிணை என்பதைப் பற்றிய பேச்சே கிடையாது. ஆர்ஷ என்று சொல்லக்கூடிய விவாகத்திலும், ஆசுரம் என்று சொல்லக்கூடிய கல்யாண முறையிலும் வரனிடமிருந்து (கல்யாணம் செய்து கொள்ளப்போகும் பையனிடம் இருந்து) தனம், பொருள் முதலியவைகளைப் பெற்றுக் கொண்டு பெண்ணிற்கும், பெண் வீட்டாருக்கும் கொடுப்பது என்று கூறப்பட்டுள்ளது. பொதுவாக வரதட்சணை என்ற சொல் வரனிடமிருந்து பெண் வீட்டார் சிறிது தட்சணை பெறுவது என்ற பொருளில் தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வரனுக்கு பணமோ பொருளோ கொடுத்து பெண் விவாகம் நடந்ததாக நமது மதநூல்களிலும் பழக்கத்திலும் இருந்ததில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் ஸம்ஸ்க்ருதத்தை எழுதும் முறை

ஸம்ஸ்க்ருதத்தைப் போலவே தீந்தமிழும் தொன்மை யானது சிறப்பு வாய்ந்து. கம்பநாடன் ஸ்ரீராமனின் ஆழ்ந்த அறிவை உணர்த்தும் போது "தென்சொற்கடந்தான் வட சொற்கு எல்லை தேர்ந்தான்" என்று கூறுகின்றான். தமிழ்நாட்டில் அவ்வப்போது தோன்றி கல்வியுலகிலும் இலக்கியத்துறையிலும் பெரும் புகழும் அடைந்த அறிஞர் களின் சரித்திரத்தைப் பார்த்தால் உபயபாஷா பாண்டித்ய முடையவர்களாக அதாவது தமிழிலும் ஸம்ஸ்க்ருதத்திலும் தேர்ந்தவர்களாக விளங்கியுள்ளதைக் காணலாம்.

இத்தகைய பண்பட்ட, தொன்மை வாய்ந்த தமிழில் ஸம்ஸ்க்ருதத்தை நேருக்கு நேராக, அதே ஒலி உண்டாகும் வகையில் எழுத முடியாமலிருப்பது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும். இது இவ்விரு மொழிகளுள் எம்மொழியின் துரத்ருஷ்டமோ தெரியவில்லை. ஸம்ஸ்க்ருத நூல்களை முக்யமாக ஸ்தோத்ரங்களை தமிழில ப்ரசுரிப்பவரகளுக்கு இது ஒரு பெருந்தடையாக இருக்கின்றது. ஸம்ஸ்க்ருத மெய்யெழுத்து வர்க்கங்களிலுள்ள முதல் நான்கு எழுத்துக் களுக்கும் ஒரே தமிழ் எழுத்தை வைத்துக் கொள்வதோ, தமிழ் எழுத்துக்கள் மீது 2, 3 என்ற எண் குறியீடுகள் தருவதோ வாசகர்களுக்கும் பதிப்பாளர்களுக்கும் மிகுந்த சிக்கலை ஏற்படுத்துகின்றது. ஏனைய த்ராவிட மொழிகளில் தெலுங்கு, கன்னடம் மலையாள மொழிகளில் இந்த ச்ரமமே கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸம்ஸ்க்ருத உயிரெழுத்துக்களைத் தமிழில் எளிதில் எழுதி விடலாம் என்ற வடிவமுள்ள விளக்கத்தை அப்படியே எழுதி விடலாம் அல்லது "ஹ" என்ற க்ரந்த எழுத்தை வைத்துக் கொண்டு ஸம்ஸ்க்ருத உச்சாரணத்திற்குத் தகுந்தவாறு ஹ, ஹி, ஹு*, ஹை என்றெல்லாம் எழுதி விடலாம். ஸம்ஸ்க்ருதத்திலுள்ள க, ச, ட, த, ப என்ற ஐந்து வர்க்கங்களிலுமுள்ள முதல் எழுத்துக்களின் மூலம் எழுதி விடலாம். ஆனால் இரண்டாவது மூன்றாவது, நான்காவது எழுத்துக்களைத் தமிழில் எழுதும் போது தான் ச்ரமம் ஏற்படுகின்றது. இதனைத் தவிர்க்க அவ்வெழுத்துக்களுக்கு நேரான க்ரந்த எழுத்துக்களை தமிழில் அமைத்துக் கொண்டு விடுவதே சிறந்த வழியாகும். ஏற்கனவே ஜ, ஷ, ஸ, ஹ என்ற எழுத்துக்களை க்ரந்த லிபிகளிலிருந்து எடுத்துக் கொண்டுள்ளோம். உண்மையில் ஸம்ஸ்க்ருத ஒலிகளையும் மற்றப் பாஷையிலுமுள்ள அதே ஒலிகளையும் தமிழில் கொணர்வதற்காகவே க்ரந்த லிபி உருவாக்கப்பட்டுள்ளது என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து ஆகும். க்ரந்த எழுத்துக்களின் வடிவம் தமிழ் எழுத்துக்களின் வடிவம் போலவே அவையாகவும் இருப்பது இக்கருத்தை வெகுவாக பலப்படுத்தும் ஓர் சான்றாகும். தமிழ் எழுத்துக்களை வடிக்கும் நிறுவனத்தினர் இவ்எழுத்துக்களை வடித்துள்ளனர். ஐந்து வர்க்கங்களுக்குமாக நமக்கு மேற்கொண்டு 14 கிரந்த எழுத்துக்களே தேவைப்படுகின்றன. இவற்றையும் எழுத்து வடிப்பவர்கள் அமைத்துத் தந்து விட்டால் அச்சகத்தினரும் அவற்றை உபயோகிப்பார்கள் என்பது ஐயமேயில்லை. இது பற்றிய நமது பெருங்கவலையும் ஆதவனைக் கண்ட பனி போல் நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே இருக்கும் படத்தில் தமிழில் இல்லாத சமஸ்கிருத எழுத்துக்களுக்கு நேரான க்ரந்த எழுத்துக்களைக் காணலாம்.

| ஸம்ஸ்க்ருத எழுத்து | க்ரந்த எழுத்து | ஸம்ஸ்க்ருத எழுத்து | க்ரந்த எழுத்து |
|---|---|---|---|
| ख | 𑌖 | द | 𑌦 |
| ग | 𑌗 | ध | 𑌧 |
| घ | 𑌘 | फ | 𑌫 |
| ङ | 𑌙 | ब | 𑌬 |
| ज | ஜ* | भ | 𑌭 |
| झ | 𑌝 | श | ஶ* |
| ठ | 𑌠 | ष | ஷ* |
| ड | 𑌡 | स | ஸ* |
| ढ | 𑌢 | | ஹ* |
| थ | 𑌥 | | |

* இக்குறியிட்ட எழுத்துக்கள் ஏற்கெனவே உபயோகத்தில் இருக்கின்றன.

*"முயற்சி திருவினையாக்கும்"?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தண சமூகம்

ஐயர் (அல்லது அய்யர், சாஸ்திரி, சர்மா, பட்டர்) என்றழைக்கப்படுவோர் தமிழ்மொழியைத் தாய்மொழி யாகக் கொண்டவர்களும் பெரும்பாலும் ஆதிசங்கரரின் அத்வைதத் தத்துவத்தைக் கடைப்பிடிப்பவர்களுமான பிராமணர்கள் ஆவர். தமிழகத்தைப் பூர்வீகமாகக் கொண்டுள்ள இவர்கள் பெரும்பாலும் தமிழகத்தில் வசிக் கின்றனர் குறிப்பிடத்தக்க அளவு கர்நாடகம் ஆந்திரம், கேரளத்திலும் காணப்படுகின்றனர். தமிழகத்தில் வாழும் தெலுங்கு மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஸ்மார்த்தப் பிராமணர்களும் ஐயர் பட்டம் தரிக்கின்றனர். ஐயர் என்ற பெயர் இடைக்காலத்தில் தமிழக்த்தில் உள்ள வெவ்வேறு பிராமண சமூகங்கள் ஒன்றுபட்ட சமுதாயமாகிய பொழுது உருவாகியது. அவர்களில் இருந்து விலகிய வைஷ்ணவத்தின் சம்பிரதாயங்களை கடைப்பிடிப்போரை ஐயங்கார் என்று அழைக்கிறோம். ஐயர்கள் தங்களின் பணிகளுக்கு ஏற்ப வெவ்வேறு உபகுழுக்களாக பிரிந்துள் ளனர். அவர்கள் கோத்திரம் வேதம் என்பதின் வகையிலும் பகுக்கப்பட்டுள்ளனர்.

**ஐயர் சமூகத்தில் பல பிரிவுகள் உள்ளன.**

- வடமா
- வாத்திமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சோழியர்
- பிரிகச்சரணம்
- அஷ்டசகஸ்ரம்
- குருக்கள்
- முக்கானி
- தீட்சிதர்

ஐயங்கார் (அல்லது அய்யங்கார்) என்றழைக்கப் படுவோர் இராமானுஜரின் விசிஷ்டாத்வைதத்தத்துவத்தைக் கடைப்பிடிக்கும் பிராமணர்கள் ஆவர் இவர்கள் பெரும் பாலும் தமிழகம், கர்நாடகம் மற்றும் ஆந்திரத்திலும் காணப்படுகின்றனர்.

இவர்களில் முக்கியமாக இரண்டு பிரிவுகள் உள்ளன.

- வடகலை
- தென்கலை

வடமா என்றழைக்கப்படுவோர் ஐயர் சமூகத்தின் ஒரு பிரிவினர் ஆவர். மற்ற ஐயர் சமூகங்கள் போல் இவர்களும் ஆதிசங்கரரின் அத்வைத்தைக் கடைபிடித்து வந்தவர்கள் இவர்களில் பலர் வைணவத்துக்கு மாறிவிட்டு ஐயங்கார் சமூகத்தின் வடகலை ஐயங்கார் பிரிவை துவங்கினார்கள். பிரபல வைணவ ஆச்சாரியர் இராமானுஜர் ஒரு வடமா குடும்பத்தில் பிறந்ததாக சிலர் நம்புகிறார்கள். பாரம்பரியத்துக்கு மாறாக இவர்களுக்கு ஒரு தனி வீர வரலாற்று உள்ளது.

நம்பூதிரி என்றழைக்கப்படுவோர் மலையாளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகளை தாய்மொழிகளாக கொண்ட பிராமணர்கள் ஆவார். பிரபல அத்வைத ஆச்சாரியர் ஆதி சங்கரர் இவர்களில் ஒருவர் ஆவார். இவர்கள் திராவிடப் பிராமணர்களில் மலையாளம் பேசும் வகையினர் என்று கூறப்படுகிறது. பண்டைய புராணங்களின் படி பரசுராமரின் ஆணைப்படி நம்பூதிரி அந்தணர்கள் நர்மதை ஆறு காவேரி ஆறு, மற்றும் கிருஷ்ணா ஆறு ஓடும் பகுதிகளிலிருந்து கேரளாவிற்கு குடி பெயர்ந்தவர்கள்.

பிராமணத் தமிழ் பேச்சு வழக்காயினும் மிகுதியும் சிதையாது இலக்கண வளத்துடன் பேசப்படுகிறது சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு

- அகம் – வீடு
- அத்திம்பேர் – அத்தையின் கணவர் (அத்தை அன்பர்)
- அக்காவின் கணவர்
- அம்மாஞ்சி – தாய் மாமாவின் மகன் (அம்மான் சேய்)
- அம்மங்கார் / அம்மாங்காள் – தாய் மாமாவின் மகள்
- ஆம்படையான் – கணவன் (அகமுடையான்)
- ஆம்படையாள் – மனைவி (அகமுடையாள்)
- நன்னா – நன்றாக
- வாண்டு – விளையாட்டுப் பிள்ளை
- ஓய் – முன்னிலை விளி
- பிள்ளாண்டான் – மகன் (பிள்ளை ஆண்டவன்)
- பட்டவர்த்தனமா – தெளிவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ சத்து நேரம் – சற்று நேரம்
- ❖ நாழி ஆயிடுத்து – நாழிகை ஆகிவிட்டது

**(வினை) + இண்டு - (வினை) + கொண்டு**

- ❖ ஈஷிண்டு – இடித்துக் கொண்டு தேய்த்துக்கொண்டு
- ❖ பேஷிண்டு – பேசிக்கொண்டு

**(வினை) + ஏள் – (வினை) + ஈர்கள்**

- ❖ வந்தேள் – வந்தீர்கள்
- ❖ போனேள் – போனீர்கள்

**(வினை) + டுத்து – (வினை) + விட்டது**

- ❖ வந்துடுத்து – வந்து விட்டது
- ❖ போயிடுத்து – போய் விட்டது

**(வினை) + த்து – (வினை) + இற்று – இறந்த கால வினை முற்று**

- ❖ தோணித்து – தோன்றிற்று

**(வினை) + அறது – (வினை) + கிறது**

- ❖ வர்றது – வருகிறது
- ❖ படுத்தறது – படுத்துகிறது
- ❖ வர்றன் – வருகிறான்
- ❖ அவா (ள்) – அவர்கள்
- ❖ பெரியவா – பெரியவர்கள்
- ❖ வந்தா – வந்தார்கள்
- ❖ வந்தாளோல்லியோ? – வந்தார்கள் அல்லவோ?
- ❖ போறதோல்லியோ? – போகிறதோ அல்லவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திராவிடப் பிராமணர் அல்லது பஞ்ச திராவிடப் பிராமணர் என்போர் விந்திய மலைக்குத் தெற்கில் உள்ள பிராமணர்கள் ஆவர் காசுமீரத்தில் எழுதப்பட்ட ராஜதரங்கினி நூலின் படி கருநாடகம், தெலுங்கானா, திராவிடம், மகாராஷ்டிரா மற்றும் குஜராத் பகுதிகளில் உள்ள பிராமணர்கள் திராவிடப் பிராமணர் ஆவர். சோழிய குல அந்தணர் சோழியர் என்றழைக்கப்படுவோர் பிராமணர் சமூகத்தின் ஒரு பிரிவினர் ஆவர். இவர்கள் சோழ நாட்டை சேர்ந்த ஆதி அந்தணர்கள் ஆதலால் சோழியர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். தற்காலத்தில் இவர்கள் சோழிய ஐயர், சோழிய ஐயங்கார் என இரு பிரிவுகளில் பல உட்பிரிவுகளாக உள்ளனர்.

**சோழிய ஐயர் உட்பிரிவுகள்**

- ஆதி முன் குடிமி மறையவர்கள் தில்லை சிதம்பரம் மூவாயிரவர்.

  திருவாசனைகாவல் ஆயிரவர் திருப்பெருந்துறை ஆவுடையார் கோயில் முன்னூற்றி ஒருவர் உறையூர் நச்சினாரக்கினியர் (பாரத்துவாசி) திருவாரூர் ஆத்திரையனார்.
- உச்சி குடிமி மறையவர்கள் திருக்கடையூர் விஜாலுர், பூதலூர், திருப்பரங்குன்றம், ஸ்வாமிமலை, வேம்பத்துர், சீர்காழி மற்றும் கும்பகோணம்.
- முன் குடிமி மறையவர்கள் இவர்கள் பெரும்பாலும் ஸாம வேதியர்கள் திருச்சி அன்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சோழநாடு திருவெள்ளறை கோவில் திருமயம் மற்றும் காவேரி கரை எழு கிராமம்
- பாண்டிய நாடு திருகோஷ்டியூர் ஸ்ரீவில்லி புத்தூர் மற்றும் தாமிரபரணி கரை ஏழு கிராம ஸாம வேதியர்கள்.

குலங்கிழார் என்போர் கோயில் அர்ச்சகர்களாகிய சிவப்பிராமணர்கள் ஆவர். பல்லவர் ஆட்சியிலும், பாண்டியர் ஆட்சியிலும் கோயில் அர்ச்சகர்களாகிய சிவப் பிராமணர்கள் குலங்கிழார்கள் என்று அழைக்கப்பட்டனர். குலம் என்பது கோயிலைக் குறிக்கும் கிழார் தலைமையுடை யவர் மேலானவர் என்ற பொருளைத் தரும். திருமால் கோயில் அர்ச்சகர்களும், சிவன் கோயில் அர்ச்சகர்களும் குழங்கிழார்கள் என்ற சிறப்புப் பெயரினைப் பெற்றிருந்தனர்.

பஞ்ச கௌடர் எனப்படுவோர் வட இந்தியப் பிராமணர் ஆவர். ஆதியில் திராவிடப் பிராமணர்களும் பஞ்சகௌடர் களும் ஒன்றாக இருந்ததாகவும் பிற்காலத்தில் பிரிந்த தாகவும் கூறப்படுகிறது. இவர்கள் வட இந்தியாவில் உள்ள பிராமணர்களையும் சாகத்தீபி பிராமணர்களையும் உள்ளடக்கி ஒரு இனமாக இலக்கியங்களில் குறிக்கப்படு கிறார்கள். சரசுவதப் பிராமணர் கன்யகுப்ய பிராமணர், கௌடப் பிராமணர், உத்கலப்பிராமணர், மைத்திலி பிராமணர் போன்றவர்கள் பஞ்சகௌடர்கள் ஆவார்கள்.

நன்றி:– விக்கிபீடியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஷாம்பவி பதிப்பகம்,
276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: நீர்வேலி.
தொலைபேசி: 021 2224143

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org